# ஏக்கருக்கு 2,00,000 ரூபாய் அள்ளிக் கொடுக்கும் இயற்கை குண்டுமல்லி



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அடுத்துள்ள சிக்கரசம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஒதிச்சாமி அவர்கள் 15 வருஷமா பூ விவசாயம் செஞ்சுட்டு வர்றேன். ரெண்டு வருஷமாத்தான் இயற்கை விவசாயத்துக்கு மாறியிருக்கேன்.இப்ப ஒரு ஏக்கர்ல குண்டுமல்லி இருக்குது. நல்ல செம்மண் பூமி. அதோட பவானி தண்ணி வேற. இது ரெண்டும் சேர்ந்துட்டதால, வெளைஞ்சு கிடக்கு குண்டுமல்லி" ஆடி முதல் மார்கழி வரை குண்டுமல்லி நடவுக்கு ஏற்ற பட்டம்.

கோடை உழவு செய்து நிலத்தைப் புழுதியாக்கி, 1.5 டன் தொழுவுரத்தைப் பரவலாக இறைத்துவிட்டு, மறுபடியும் இரண்டு முறை ஏர் உழவு செய்ய வேண்டும். நான்கு அடி இடைவெளியில் பார் முறை பாத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். பாத்திகளில் நான்கு அடி இடைவெளியில், ஒரு அடி ஆழம், அரை அடி அகலம் கொண்ட குழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2,500 குழிகள் வரை எடுக்கலாம். ஐந்து மாத வயதுடைய நாற்றுகளைக் குழிக்கு இரண்டாக பதியம்போட்டு மூடி, உடனே உயிர்த் தண்ணீர் கொடுக்க வேண்டும். ராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடம் பகுதியில் இருந்துதான் தமிழகம் முழுக்க மல்லி நாற்றுகளை விவசாயிகள் வாங்கி நடுகிறார்கள். நாற்று ஒரு ரூபாய் என்கிற விலையில், அங்கிருந்து கொண்டு வந்து நேரடியாகக் கொடுப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள்.

நடவு முடிந்ததும் வாரம் ஒரு தடவை தண்ணீர்ப்பாசனம் செய்ய வேண்டும். (சொட்டு நீர்ப்பாசனமும் அமைக்கலாம்). முதல் ஐந்து மாதத்துக்கு மாதம் ஒரு களை எடுக்க வேண்டும். இரண்டாவது களை மற்றும் ஐந்தாவது களைக்குப் பிறகு, செடிக்கு இரண்டு கிலோ வீதம் மண்புழு உரத்தை வைத்துப் பாசனம் செய்ய வேண்டும். தொடர்ந்து 2 மாதத்துக்கு ஒரு முறை 500 லிட்டர் கோமூத்திரத்துடன், 50 கிலோ சாணத்தைக் கலந்து பாசனத் தண்ணீரோடு கொடுத்தால் வேர் நன்றாக பிடித்து, செடிகள் ஒரே சீராக தளதளப்புடன் வளரும். செம்பேன், மொக்குப் புழு,

வேர்ப்புழு, இலைச்சுருட்டுப் புழுத் தாக்குதலை சமாளிக்க மூலிகைப் பூச்சிவிரட்டி தெளித்தாலே போதும். நடவு செய்த 150-ம் நாளில் பூ மொட்டுகளை அறுவடை செய்யலாம்.

ஆரம்பத்தில் 10 கிலோ என்று இருக்கும் மகசூல், மெள்ள உயர்ந்து அதிகபட்சமாக 150 கிலோ வரைக்கும்கூட செல்லும். குறிப்பாக பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதிகபட்ச மகசூல் கிடைக்கும். ஜீன், ஜீலை, ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் 10 கிலோ என்கிற அளவில்தான் கிடைக்கும். ஆனால், அந்த சமயத்தில்தான் குண்டுமல்லியின் விலை உச்சத்தில் இருக்கும்.

அறுவடை 35 நாள், இடைவெளி 35 நாள் என்கிற வகையில்தான் குண்டுமல்லி அறுவடை இருக்கும். அதிலும் கவாத்து செய்யும்போது சுத்தமாக அறுவடையே இருக்காது. ஆகக்கூடி, சராசரியாக ஆண்டுக்கு 3 டன் மகசூல் கிடைக்கும்.

குண்டுமல்லிச் செடியை ஒரு தடவை பயிர் செய்துவிட்டால், சுமார் 15 ஆண்டுகள் வரை தொடர் மகசூல் கொடுக்கும். எனவே, தொடர்ந்து 6 மாதத்துக்கு ஒரு தடவை செடிகளைக் கவாத்து செய்வது அவசியம்.

கிலோ 70 ரூபாய்க்கு குறைச்சு இதுவரைக்கு விலை போனதில்ல. போன வருஷம் டிசம்பர் மாசம் 10-ம் தேதி ஒரு கிலோ பூ 700 ரூபாய்க்கு விலை போச்சு. சராசரியா கிலோவுக்கு 80 ரூபாய் கிடைக்கும்.

நான் இயற்கை முறையில் உற்பத்தி செய்றதால, ரெண்டு நாள் வரைக்கும் பூ வாடாம, மலர்ச்சியா இருக்கறது பெரிய வரப்பிரசாதம். அதனால் சில வியாபாரிக, தோட்டத்துக்கே வந்து கிலோவுக்கு 20 ரூபாய் கூடுதலா கொடுத்து வாங்கிட்டுப் போறாங்க. ஒரு நாளைக்கு, ஒரு மாடு, சராசரியா 10 லிட்டர் கோமூத்திரம், 8 கிலோ சாணம் கொடக்குது. எங்கிட்ட ரெண்டு மாடுக இருக்கு. என் இடுபொருள் தேவையைப்பூர்த்தி செய்ய இதுவே போதுமானதா இருக்கு.

தொடர்புக்கு :

ப.ஒதிச்சாமி

சத்தியமங்கலம் (அருகில்),சிக்கரசம்பாளையம் கிராமம்

ஈரோடு மாவட்டம், அலைபேசி : 97897-15898